இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 11 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஆவணி 05 – வியாழக்கிழமை 21 ஆகஸ்ட் 2025 – மதுரை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 11: Thiruvalluvar Year - 2056 - Aavani 05 - Thursday 21 August 2025 - Madurai 12 Pages ₹ 5.00




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் – திருமதி துர்கா ஸ்டாலின், தங்களது 50–வது திருமண நாளையொட்டி நேற்று (20.8.2025) சென்னை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்தினர். உடன் அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் – திருமதி துர்கா ஸ்டாலின், தங்களது 50–வது திருமண நாளையொட்டி நேற்று (20.8.2025) சென்னை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்தினர். உடன் அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளனர்.

## பேரறிஞர் அண்ணா – முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடங்களில் மரியாதை! – 50-வது திருமண நாள்:

# சிறுமலர் பள்ளியில் மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு உணவு - நலஉதவிகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் – திருமதி துர்கா ஸ்டாலின் வழங்கி மகிழ்ந்தனர்!

**சென்னை, ஆக.21 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 50வது மணநாளையொட்டி பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடங்களில் மரியாதை செலுத்தினார். ஆயிரம்விளக்கு சிறுமலர் பள்ளியில் மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களும், திருமதி. துர்கா ஸ்டாலின் அவர்களும் உணவு, நல உதவிகளை வழங்கினர்.**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தன்னுடைய 50வது மண நாளையொட்டி பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடங்களில் மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

தி.மு.கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று தன்னுடைய 50வது மண நாளையொட்டி சென்னை மெரினாவில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடங்களில் முதல்வர் மு.க.ஸ்டாலின், திருமதி. துர்கா ஸ்டாலின் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

அப்போது, அமைச்சர்கள் கே.என்.நேரு, சு.முத்துசாமி, மா.சுப்ரமணியன், எஸ்.எஸ்.சிவசங்கர், பி.கே.சேகர்பாபு உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

### தயாளு அம்மாளிடம் வாழ்த்துப் பெற்றனர்!

முன்னதாக, கோபாலபுரத்தில் உள்ள இல்லத்திற்குச் சென்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், துர்கா ஸ்டாலின் ஆகிய இருவரும், அங்கு முத்தமிழறிஞர் கலைஞரின் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர். இதை தொடர்ந்து தயாளு அம்மாளிடம் வாழ்த்துப் பெற்றனர்.

இதனிடையே, ஆழ்வார்பேட்டையில் உள்ள முகாம் அலுவலகத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், தி.மு.க. நிர்வாகிகள் உள்ளிட்டோர் நேரில் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்தனர்.

### திருமண நாளையொட்டி முதல்வர் சமூக வலைதளப் பதிவு!

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், **அரை நூற்றாண்டாக என் வாழ்வின் துணையாக, என்னில் பாதியாக துர்கா நுழைந்து, தன்னுடைய அன்பால் மணவாழ்வை மன நிறைவான வாழ்க்கையாக அளித்துள்ளார் என்று தெரிவித்துள்ளார். அவர் மீதான அளவற்ற அன்பே என் நன்றி! எதிர்பார்ப்புகளற்ற அன்பும், விட்டுக்கொடுத்தலும் இல்வாழ்வை நல்வாழ்வாக்கும் என இளைய தலைமுறையினருக்குச் சொல்லிக் கொள்கிறோம். வீடும், நாடும் போற்றும் வாழ்வை அனைவரும் வாழ்ந்திட விழைகிறோம்** என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

### மாணவர்களுடன் மகிழ்ந்த முதல்வர்!

50வது திருமண நாளையொட்டி சென்னையில் உள்ள சிறுமலர் பள்ளியில் மாற்றுத் திறனாளி மாணவர்களுடன் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கேக் வெட்டி கொண்டாடினார்.

சென்னை ஆயிரம்விளக்கு பகுதியில் அமைந்துள்ள சிறுமலர் பள்ளியில் செவித்திறன் குறைபாடு மற்றும் பார்வை குறைபாடுள்ள மாற்றுத்திறனாளி மாணவ, மாணவிகளுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், திருமதி. துர்கா ஸ்டாலின் ஆகியோர் உணவு வழங்கியும், கேக் கொடுத்தும் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். அப்போது, மாணவ, மாணவிகள் பாடல் பாடி முதலமைச்சருக்கு வாழ்த்துத் தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து சிறுமலர் பள்ளி ஆசிரியைகளுடன் கேக் வெட்டி, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், திருமதி. துர்கா ஸ்டாலின் ஆகியோர் மகிழ்ச்சியை பகிர்ந்து கொண்டனர். அப்போது, அவர்களுக்கு சிறுமலர் பள்ளி ஆசிரியைகள் வாழ்த்துத் தெரிவித்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், திருமதி துர்கா ஸ்டாலின், தங்களது 50–வது திருமண நாளையொட்டி நேற்று (20.8.2025) சென்னை, சிறுமலர் பார்வை மற்றும் செவித்திறன் குறைபாடுடையோர் மேல்நிலைப் பள்ளிக்கு நேரில் சென்று, அங்குள்ள சிறுவர், சிறுமியர்களுக்கு உணவு மற்றும் இனிப்புகளை வழங்கினர். உடன் சட்டமன்ற உறுப்பினர் மரு. நா.எழிலன், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழு தலைவர் நே.சிற்றரசு, நிர்வாகிகள் அன்பகம் கலை, மா.பா.அன்புதுரை, நுங்கை ராஜ், சிறுமலர் பள்ளியின் தலைமை அருட்சகோதரி ரோஸ்லின், தாளாளர் அருட்சகோதரி ஜெம்மா, வளாக இயக்குநர் அருட்சகோதரி சவேரியா, தலைமையாசிரியைகள் அருட்சகோதரி பெர்பைன், அருட்சகோதரி நிர்மலா ஆகியோர் உள்ளனர்.

# 2வது முறையாக பேரவையில் மசோதாவை நிறைவேற்றி அனுப்பினால் ஆளுநர் ஒப்புதல் வழங்க வேண்டும்!

## தமிழக அரசு தொடுத்த வழக்கில் உச்சநீதிமன்ற நீதிபதிகள் கருத்து!

**புதுடெல்லி, ஆக. 21 -**

**ஆளுநர்கள் தங்களது தனி விருப்பத்தை மசோதாக்கள் மீது பயன்படுத்துவதால் அதிக அளவில் வழக்குகள் தாக்கல் செய்யப்படுவதாக, உச்சநீதிமன்றம் கருத்து தெரிவித்துள்ளது. இரண்டாவது முறையாக சட்டப்பேரவையில் மசோதாவை நிறைவேற்றி அனுப்பினால், அதற்கு ஒப்புதல் வழங்குவதைத் தவிர, ஆளுநருக்கு வேறு வழி இல்லை என்றும் நீதிபதிகள் கூறியுள்ளனர்.**

சட்ட மசோதாக்களுக்கு கால நிர்ணயம் தொடர்பாக, தமிழ்நாடு அரசு தொடர்ந்த வழக்கு உச்சநீதிமன்றத்தில் விசாரணையில் நடைபெற்று வருகிறது. நேற்று முன்தினம் நடைபெற்ற விசாரணையில் அரசியல் காரணங்களுக்காக குடியரசுத் தலைவர் மூலம் ஒன்றிய அரசு மனுவைத் தாக்கல் செய்துள்ளதாக, தமிழ்நாடு அரசு தெரிவித்தது. மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்க காலக்கெடு நிர்ணயிக்கப்பட்ட விவகாரத்தில், குடியரசுத் தலைவர் எழுப்பிய கேள்விகளுக்கு விளக்கம் தரலாம், தீர்ப்பை ஒருபோதும் மாற்ற முடியாது என நீதிபதிகள் தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில், இரண்டாவது நாளாக நேற்றும் தலைமை நீதிபதி பி.ஆர்.கவாய் தலைமையிலான 5 நீதிபதிகள் அடங்கிய அரசியல் சாசன அமர்வு முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது.

அப்போது, அரசியல் சாசனம் இயற்றியபோது ஆளுநருக்கும், மாநில அரசுக்கும் இடையில் நல்லிணக்கம் இருக்கும் என்ற தொலைநோக்கு பார்வையை நாம் நிறைவேற்றி இருக்கிறோமா? என்று ஒன்றிய அரசு வழக்கறிஞரிடம் நீதிபதிகள் கேள்வி எழுப்பினர்.

ஆளுநர்கள் தங்களது தனி விருப்பத்தை மசோதாக்கள் மீது பயன்படுத்துவதால் ஆளுநர்கள் மீது அதிக அளவில் வழக்குகள் தாக்கல் செய்யப்படுவதாகவும் உச்சநீதிமன்றம் கருத்து தெரிவித்துள்ளது. சில மாநிலங்களின் ஆளுநர்கள், மசோதாக்கள் மீது தங்களது தனி விருப்பத்தை பயன்படுத்தி உள்ளனர்.

வழக்கு விசாரணையின்போது அதனை சந்தித்த அனுபவம் தங்களுக்கு உள்ளதாகவும் தலைமை நீதிபதி அமர்வு கருத்து கூறியது.

மேலும், இரண்டாவது முறையாக சட்டபேரவை மசோதாவை நிறைவேற்றி அனுப்பினால் அதற்கு ஒப்புதல் வழங்குவதை தவிர ஆளுநருக்கு வேறு வழி இல்லை என்று உச்சநீதிமன்றம் தெரிவித்தது.

மசோதாக்கள் மீது முடிவு எடுப்பது, நிறுத்திவைப்பது, குடியரசு தலைவருக்கு அனுப்புவது இதில் உள்ள காலதாமதம் முக்கிய பிரச்சினையாக உள்ளது என்பதை நீதிபதிகள் சுட்டிக் காட்டினர்.

தமிழ்நாடு மசோதாக்களை பொறுத்தவரை 12 மசோதாக்களில் 10 மசோதாக்களை ஆளுநர் நிறுத்தி வைத்துள்ளதாகவும் உச்சநீதிமன்றம் தெரிவித்தது. மசோதா நிறுத்தி வைக்கப்பட்டால் மசோதா செயல் இழந்து விட்டது என்று பொருள் என்பதனை ஏற்க முடியாது, அப்படியானால் பெரும்பான்மை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசானது ஆளுநரின் விருப்பப்படிதான் செயல்படும் என்பது போன்று ஆகிவிடும் என்றும் நீதிபதிகள் தங்கள் கருத்தை வெளிப்படுத்தினர்.